# தங்கைக்கொரு பாட்டு

## சிறுவர் பாடல்கள்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தங்கைக்கொரு பாட்டு |
| ஆசிரியர் | : | ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| வகை | : | சிறுவர் பாடல்கள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படமும் படங்களும் | : | ச.அ.அருள்பாஸ்கரன் M.A (Fine Arts) |
| முதற்பதிப்பு | : | 15 - 07 - 2012 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி,<br>உவர்மலை - திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L. 14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-52535-7-4 |
| விலை | : | ரூபாய் 150/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இந்நூல் என்றும் இதயக்கோயிலில் இருந்து
இயக்கும் எனதருமை மனைவி மேரிலூர்துக்கு

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கைக்கொரு பாட்டு

## சிறுவர் பாடல்கள்

கலாபூசணம் கேணிப்பித்தன்.
**ச.அருளானந்தம்** *B.A,M.Lit,D.A,PhD.SLEAS.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிறுவர் பாடல்கள் தீட்டிடவே
சிறந்தவர் அருளா னந்தத்தார்தான்
பெறுவது நமக்கோர் பேறாமே
பிள்ளைகள் கொடுத்து வைத்தவரே!

பாடலும் உண்டு படமும் உண்டே
படித்திட நல்ல இசையதும் உண்டே
தேடல்கள் செய்தே தீட்டிடவே
சிறந்தவர் கேணியின் பித்தர்தான்

அருளினை ஆண்டுயர் ஆனந்தர்
அன்புடன் பண்பும் சேர்ந்தவரே
பொருளாய்த் தேடிய பொருள்யாவும்
புத்தகம் புத்தகமாய் வருதே

நல்லவர் வல்லவர் நூல் எழுத
நாடியே பெறுவது நமது கடன்
சொல்லுதல் எளிதாம் செயல் அரிதாம்
சுவைத்திட வைப்போம் சிறுவரையே

- தாமரைத் தீவான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

சிறுவர்கள் சிந்தனைத் திறன் படைத்தவர்கள். எதனையும் துருவி ஆராயும் ஆற்றல் கொண்டவர்கள். சிறுவர்களது உள்ளங்கள் நாற்றுமேடை போன்றன. அவர்களது உள்ளங்களில் சிந்திக்கத் தக்க எண்ணக்கருக்களை விதைக்க வேண்டும். அவ்விதைகள் நல்லனவாகவும், வல்லனவாகவும் இருத்தல் அவசியம். சில கல்விமான்கள் எனப்படுபவர்கள் அறக்கருத்துக்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்கத் தேவையில்லை. நவீன விஞ்ஞான, தொழில்நுட்பக் கருத்துக்களை சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று கூறிவருகின்றனர்.

அறக்கருத்துக்கள் கொண்ட சிறுவர் இலக்கியங்கள் நமது சிறுவர்களுக்கு அவசியம் தேவை என்பதை இன்றைய சமூகம் போகின்ற போக்கை உணர்ந்தால் புரியும். "வையத்துள் வாழ்வாங்கு வாழும்" கலையை நம் இளைய சமுதாயத்துக்கு வழங்க வேண்டியது அசியமாகிறது. பல்வேறு தலைப்புக்களில் சிறுவர்களுக்கு அறிவைப் புகட்ட வேண்டும். அவ்வகையில் நானும் என்னால் முடிந்தவரை சிறுவர்களுக்காக எழுதுகிறேன். அவர்களுக்கு இவ்வகை நூல்களை அறிமுகம் செய்து படிக்கத் தூண்ட வேண்டும்.

இச்செயற்பாட்டினை பெற்றோரும், ஆசிரியர்களும் முன்னெடுக்க வேண்டும். நாங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த வழிகாட்டல்களைச் செய்யத் தவறினால் அதன் எதிர் மாறான பிரதிபலிப்புக்களைத்தான் காணமுடியும். நல்ல சமூகத்தை உருவாக்க சிந்திக்கவைக்கும் ஆற்றலை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

பல்வகையான சிறுவர் பாடல்களைக் கலந்து இந்நூலில் புகுத்தியுள்ளேன். சிறுவருக்கு இவற்றை அறிமுகம் செய்து சிந்திக்க வையுங்கள். இந்நூலின் உருவாக்கத்தில் மறைமுகமாகப் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி.

நன்றி
கேணிப்பித்தன் ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள வாசகர்களே

நமது பிள்ளைகளைப் பற்றிச் சிந்திப்போமா? அவர்கள் நமது செல்வங்கள் அல்லவா? "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்துள் முந்தி இருப்பச் செயலல்லவா"? நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு வாசிக்கிறார்களோ, கற்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். அதேபோல் நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு எழுத முனைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். இதுதான் உண்மை. நமது பிள்ளைகளை நன்றாக வாசிக்கப் பழக்க வேண்டும். அந்தப் பழக்கத்தைப் பெற்றோர்கள்தான் வீட்டில் தொடக்கி வைக்க வேண்டும். பிள்ளைகளுக்குப் படிக்கும் நேரத்தை நீங்கள்தான் ஒதுக்க வேண்டும். அவர்கள் படிக்கும் நேரத்தில் தொலைக்காட்சியைப் பார்ப்பதைத் தவிர்த்து விடுங்கள். நீங்களும் வாசித்தால்தான் பிள்ளைகளும் உங்களைப் பின்பற்றி வாசிப்பார்கள்.

பெற்றோருக்கு அடுத்து நிற்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை வாசிக்கவும், எழுதவும் தூண்டவேண்டும். பெற்றோரினது சொற்களைவிடவும் பிள்ளைகளது மனங்களிலே ஆசிரியர்களது சொற்கள் எடுபடும். ஆழப்பதியும். பெரும்பாலும் மாணவர்கள் ஆசிரியர்களைத்தான் பின்பற்றுகிறார்கள். நீங்கள் சிறந்த வழிகாட்டிகள். ஆதலால் அவர்களை வாசிப்பில் ஈடுபட வைக்க வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். நல்ல நல்ல நூல்களை வாசிக்கும்படி அறிவுறுத்துங்கள். அதேபோல் நல்ல நல்ல நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்யவும் வேண்டும்.

பலபெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தமது செல்வங்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். தங்களையிட்டுக் கவலையில்லாது வாழ்பவர்கள்தான் நமது பிள்ளைகள். அவர்களை நல்லவர்களாக்க வேண்டிய பாரிய பொறுப்புப் பெற்றாரிடம் உள்ளது. நாங்கள் பல அறிஞர் பெருமக்களிடம் நல்ல நூல்களை எழுதும்படி கேட்டு அவற்றைப் பிரசுரம் செய்து தருகிறோம். இந்த நூலை எழுதியவர் ஆசிரியராக அதிபராகக், கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய எழுத்தாளர் திரு.ச.அருளானந்தம் ஆவார். இந்த நூல் பிள்ளைகளைச் சிந்திக்க வைக்கிறது. இதனை வாங்கி உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்துப் படிக்கத் தூண்டுங்கள். உங்களது பிள்ளைகளின் நல்வாழ்வு உங்கள் கைகளில்தான் உண்டு.

நன்றி
க.சதீஸ்
முகாமையாளர்.
லங்கா புத்தகசாலை
கொழும்பு -12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் உள்ளே..............


- தங்காய் ஓடிவா
- எங்கள் செல்வம்
- தொப்புள் கொடி உறவு
- அறிந்து கொள்
- பெருவெடிப்பு
- சிந்தையில் கொள்வோம்
- வான்வெளி
- யார்செயல்?
- நாம் தங்காய்
- நிலநடுக்கம்
- பூமிப் பந்தைச் சுமப்பது
- இயற்கைச் சூழல்
- உயிரினம்
- உழைப்பு
- இயற்கை விநோதம்
- வீட்டுத் தென்னை
- தோற்றப் பாடு
- பள்ளி நாட்கள்
- நாராய்..நாராய்..
- சூரியன்
- வானவில்
- அழகுப் பூக்களில் அற்புதம்
- கதையும் விதையும்
- புரிந்து கொள்
- அதிசயங்கள்
- தாவர வகை
- வேர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்காய் ஓடிவா!



அன்புத் தங்காய் ஓடிவா - இந்த
அண்ணன் பாட ஆடிவா
என்றும் சிரித்தே பாடிவா - பெற்றோர்
இதயம் குளிர நாடிவா


முகிலைக் கிழித்து வெளிவரும் - அந்த
முழுமதி போலே அசைந்துவா
அகிலம் உன்னைப் புகழவே - நீ
ஆடிப் ஓடிப் பறந்து வா



பெண்ணாய் பிறந்த பேற்றினை-உன்
பெற்றார் பெறவே வாழ்ந்து வா
கண்ணை இமைதான் காக்கும் - உனைக்
கடவுள் காக்கப் பயின்றுவா



உன்னை உலகம் போற்றணும் - சமூக
உணர்வு உவந்து ஏற்கணும்
தன்னை உணரும் கல்வியை - என்
தங்காய் பெற்று உயரணும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் செல்வம்



எங்கள் செல்வம் நீயேதான் - என்று
ஏற்றம் பெறவே வாழ்த்துவோம்
தங்க நிலவாய் ஜொலித்துவா - எம்முன்
தத்தி முன்னால் சிரித்துவா




கற்றவர் உன்னை வாழ்த்தணும்- கல்வி
கற்று நீமுன் னேறணும்
உற்றவர் சுற்றம் போற்றணும் - உன்
உயர்ச்சி கண்டு மகிழணும்.



உலகின் போக்கைப் புரிந்துவாழ்- அதன்
உண்மைத் தன்மையை உணர்ந்துவாழ்
சுழலும் உலகில் யாவுமே - ஒரு
சுழற்சி முறையில் மாறிடும்



மானிடர் யாவரும் ஓர்குலம் - ஆண்பெண்
மாத்திரம் இங்குள ஈர்குலம்
மானிடப் பிறவி ஒருமுறைதான் - இதை
மனதில் கொண்டு வாழ்ந்திடு.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்புள் கொடி உறவு



அம்மா தொப்புள் கொடியிலே - நீ
அரும்பி வந்த பூங்கொடி
இம்மா நிலத்தவர் போற்றவே - இந்த
உலகைப் புரிந்து வாழடி



அன்னை பெற்ற செல்வமே - எங்கள்
அன்பின் ஊற்றாம் தங்கையே
என்ன பேறு செய்துளோம் - உன்னை
எங்கள் உறவாய் பெற்றுளோம்.

உன்னைப் போலொரு பூமகள் - இந்த
உலகில் வேறெமெக் கேதடி.
கன்னம் குழிவிழ சிரித்துவா - உள்ளம்
களிப்பால் நீந்தப் பாடிவா.



கண்ணில் சிரிப்புத் துள்ளணும் - உன்னைக்
காணும் கண்களும் அள்ளணும்
விண்ணில் இறங்கி வந்திடும் - தேவ
வடிவம் முகத்தில் பொலிந்திடும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிந்து கொள்

நீவாழ் உலகைப் புரிந்துகொள் - அதன்
நிலமை தன்னை அறிந்துகொள்
நாவால் உலகை ஆளலாம் - உன்
நல்மதி உன்னை வாழ்த்தலாம்.





சூரியன் கிழக்கில் உதிக்குமாம் - நீ
சுழன்று முகத்தைக் காட்டிநில்
சீரிய உன்நிழல் உன்பின்னால் - நீண்டு
நிலத்தில் படுக்கும் பார்த்திரு



முன்னால் எடுத்தடி வைத்துப்பார் - நிழல்
முன்னால் உன்னோடு நடக்கும்பார்
பின்னால் திரும்பிப் பார்த்திடு - நிழல்
பின்னால் தொடர்ந்து வந்திடும்

மதியம் உன்நிழல் எங்கேசொல் - உன்
மதியால் அதனைப் புரிந்துகொள்
எதையும் சிந்தனை செய்தபின் - நீ
எடுத்த செயலதை முடித்திடு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருவெடிப்பு

வானக் கோழி முக்கியதாம்
வந்தொரு முட்டை விழுந்ததுவாம்
தானாய்ச் சுழன்று கொண்டதுவாம்
தாவும் வெப்பம் கொண்டதுவாம்



அணுக்கள் பலவும் இருந்தனவாம்
அதனதன் அளவில் சேர்ந்தனவாம்
கணக்கிடு அளவில் கலந்தனவாம்
கனன்று ஒருநாள் வெடித்ததுவாம்





சடுதி வெடிப்புப் “பெருவெடி“ப்பாம்
சிதறிய துண்டங்கள் சுழன்றனவாம்
சுடுநிலை மெதுவாய்த் தணிந்ததுவாம்
சிறுகச் சிறுக இறுகியதாம்.




சூரியக் குடும்பம் உருவாச்சாம்
சொல்வார் அதிலொன்று நமதுலகம்
சூரியக் குஞ்சும் நடுவிலுண்டாம்
சூழ்ந்த துண்டங்கள் வலம்வருதாம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தையில் கொள்வோம்



ஒன்பது கோள்கள் சூழ்ந்துவரும் - நம்
எழிலார் சூரியன் நடுவில் வரும்
ஒன்றை யொன்று ஈர்த்தவண்ணம் - அவை
ஒழுங்காய் சுழன்றுமே உலாவரும்



நாம்வாழ் உலகம் பூகோளம் - அதை
நலமாய்க் காக்கும் வளிக்கோளம்
பூமியைத் தாக்கும் ஊதாக்கதிர் - உறிஞ்சி
புவியைக் காக்கும் ஓசோன்படை




உயிரினம் வாழும் சூழ்நிலைதான் - நமது
உலகினில் மட்டும் உண்டென்பார்
பயிர்வளர் பருவ காலங்கள் - நம்
பாரினில் மட்டுமே உண்டென்பார்

நீரும் நிலமும் நிறைந்துள்ளது - உலகில்
நித்தம் தேடுதல் செய்திடுவோம்
சேரும் அறிவொடு இயற்கையினை - தெளிந்து
சிந்தையில் கொண்டு உழைத்திடுவோம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வான்வெளி



வான்வெளி பரந்து கிடக்கிறது - அதில்
வருவது காலையில் சூரியனாம்
வானில் குளிர்ந்த ஒளிபரப்பி - பவனி
வலம்வரும் இரவில் சந்திரனாம்





சூரியன் வெப்பம் தருகிறது - புவி
சூழும் இயக்கம் கொள்கிறது
காரியம் பலவும் நடக்கிறது - பரந்து
காற்றும் அசைந்து நகர்கிறது




இரவில் தெரியும் விண்மீன்கள் - பகலில்
எங்கே ஓடி மறைகிறதோ?
இரவுத்திரையைஅலங்கரித்து - விண்மீன்
இருப்பது யாரை அழைப்பதற்கோ?

பகலில் நீல வானம்போய் - இரவில்
படரும் கருமை கொள்வதுமேன்?
பகலவன் மறையும் நேரத்தில் - மேற்கு
புனையும் கோலம் விந்தையன்றோ?










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் செயல்?



சூரியன் கிழக்கே உதிக்கிறது - கிளம்பி
சுழன்று மேற்கே மறைகிறது.
யாரிதை சொல்லிச் செய்தார்கள் - சரியாய்
யாரிதை இயக்கி வைத்தார்கள்




உலகைச் சுழல வைத்ததுயார்? - அது
உலவி வரவழி செய்ததுயார்?
நிலவை இரவில் வான்வெளியில் - வந்து
நிலவைப் பொழியச் செய்ததுயார்.?



நீரில் உயிரினம் வாழ்கிறது - சில
நிலத்தின் மீது வாழ்கிறது
நீரிலும் நிலத்திலும் சிலவற்றை - உலகில்
நிலவி வாழ வைத்ததுயார்?



மரமும் செடிகொடி உயிர்வாழ - உணவை
ஊட்டி விடுவது யார்செயலோ?
புரளும் அலைகளை கடல்மடியில் - உருட்டிப்
பரத்தி விடுவது யாரெவரோ?











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் தங்காய்



இலங்கை மக்கள் நாம்தங்காய் - இங்கு
இருப்பவர் எல்லாம் இலங்கையரே
சலனம் மனிதர்க்கு ஏனாமோ - புத்தம்
சரணம் என்பது பொய்யாமோ?

ஆயிரம் பெயரால் அழைத்தாலும் - இறைவன்
அற்ப மனிதர்முன் வரமாட்டான்
போயிதற் கொருசண்டை போடுவதோ - விலங்கு
போலவே மனிதர் வாழுவதோ?



சிங்களம் தமிழும் ஆங்கிலமும் - சேர்ந்து
சிறப்புறப் பயில்வோம் வாருங்கள்
எங்கும் பரந்து வாழுமிறை - உறையும்
இடங்களை இடிப்பது முறையாமோ?



எத்தனை சண்டை மனிதருக்குள்ளே - தங்காய்
இன மொழி மதமெனும் பெயரினிலே
இத்தரை மாந்தர் திருந்தவழி - உன்போல்
இளைய தலைமுறை வரவேண்டும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலநடுக்கம்


பூமியைத் தாங்கும் ஆமையாரும்
பொறுமை காத்து நிற்பாராம்
ஆமை அசைந்து கொள்வதினால்
அகிலம் நடுங்கிக் கொள்கிறதாம்



அகிலம் நடுங்க நிலம் நடுங்கும்
அனைத்தும் அசைந்து இடிபடுமாம்
புகையும் பாறைத் தீக்குழம்பும்
பரவி புவியில் அழிவு தரும்




கடலும் பொங்கி ஆர்ப்பரிக்கும்
கடற்கோள் நிலத்தை வாரிவிடும்
இடரில் உயிரினம் சிக்கிவிடும்
இழப்பு எங்கும் சோகமயம்.



ஆமை முதுகில் பூமியில்லை
அசைவும் ஆமை கொள்வதில்லை
பூமிக் கோளம் உள்ளிருக்கும்
புவியின் விசைதான் காரணமாம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிப் பந்தைச் சுமப்பது




அடுத்து மூன்று திமிங்கிலங்கள்
அழகுப் பூமியைச் சுமக்கிறதாம்
எடுத்துச் சொன்ன யாவையுமே
எவரும் சென்று பார்க்கவில்லை




மனிதர் நடந்து பார்த்தார்கள்
மாறி விலங்கில் சென்றார்கள்
இனிய கடலைக் கடந்தார்கள்
எனினும் பயணம் முடியவில்லை



சூரியன் உதித்து மறைவதையும்
சந்திரன் தேய்ந்து வளர்வதையும்
பாரினைப் பார்த்துக் கண்சிமிட்டும்
பால்வெளி விண்மீன் கண்டார்கள்.



உலகம் உருண்டை என்றவரின்
உயிரைப் பறித்துக் கொண்டார்கள்
நலமாய் இதனைக் கேள்தங்காய்
நாலும் தெரிந்து வாழ்தங்காய்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கைச் சூழல்



இயற்கைச் சூழல் அழகு - எங்கும்
எழிலும் மலர்ந்து காட்டும்
மயக்கம் கொள்ள வைக்கும் - மனதை
மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும்

காணும் பொருட்கள் யாவும் - நமக்கு
கற்றுத் தருமாம் பாடம்
தோணும் அனைத்தும் கற்றால் - வாழ்வின்
தோற்றம் யாவும் புரியும்




உயிர்கள் உள்ள பொருட்கள் - யாவும்
ஊர்ந்து நடந்து நிற்கும்
உயிரைக் காக்கும் உணவு - உண்டு
உருவம் வளர்ச்சி கொள்ளும்




சூழல் காட்டும் பாடம் - நாம்
சொல்லும் அளவில் இல்லை.
வாழும் உலக மாந்தர் - இதனை
வடிவாய் கற்க வேண்டும்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினம்




உயிர்கள் உள்ள அனைத்தும் - இந்த
உலகில் உணவு கொள்ளும்
உயிரை உயிர்கள் பெருக்கும் - இயற்கை
உந்து சக்தி வழங்கும்



நிலத்தில் சிலது வாழும் - சில
நீர் நிலையில் வாழும்
நிலத்தில் நீர் நிலையிலும் - சில
நெகிழ்ந்து வாழ்ந்து வருமாம்



விலங்கு அசைந்து திரியும் - தாவரம்
வேரை ஊன்றி நிற்கும்
புலன்கள் உள்ள விலங்கு - சூழலைப்
புரிந்து வாழ்ந்து கொள்ளும்



புல்லை உண்ணும் விலங்கு - சில
புலாலை உண்டு வாழும்
கல்லி நிலத்தைக் குடைந்து - தாவரம்
கனிய நீரை உறிஞ்சும்.



மரமும் செடியும் கொடியும் - வாழும்
மற்ற விலங்கு வகையும்
கிரமம் சுவாசம் செய்யும் - மூச்சு
காற்றால் உயிரும் வாழும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழைப்பு

உணவு கொள்ளும் விலங்கு - யாவும்
உணவு தேடி அலையும்
தனது உணவை நிலத்தில் - நின்று
தாவர வகையும் பெறுமாம்.






விலங்கு இனத்தை பெருக்கும் - மரம்
பூக்கும் காய்த்துப் பழுக்கும்
பழத்தின் உள்ளே விதையும் - இருந்து
பருவம் பார்த்து முதிரும்



விதையுள் முளையும் இருக்கும் - அது
நிலத்தைச் சேர்ந்து முளைக்கும்
பதமாய் வேரை நிலத்துள் - நீட்டி
பார்த்து இலையை விரிக்கும்




இலையை விரித்து வானை-முளை
எட்டிப் பார்த்துச் சிரிக்கும்
இலையில் சூரிய ஒளியும் - பட்டு
ஒளித் தொகுப்பும் நடக்கும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இயற்கை விநோதம்



மரத்தின் இலையைப் பாரு - அவற்றின்
வடிவம் தன்னை நோக்கு
பெரிதும் சிறிதாய் இலைகள் - தங்காய்
பல வடிவில் உண்டு



இலையில் பச்சையம் இருக்கும் - அது
உணவு செய்ய உதவும்
இலையும் வேரும் சேர்ந்து - மரத்தை
இனிது வாழச் செய்யும்



மரத்தின் கீழே விதைகள் - விழுந்து
மண்ணில் முளைத்து வந்தால்
உரமாய் வளர முடியா - இயற்கை
உதவி பரவச் செய்யும்.



உலகில் வாழும் உயிர்கள் - எதற்கும்
ஒக்சிசன் வாயு தேவை
உலகில் தாவரம் இலையேல் - நமக்கு
எப்படி ஒக்சிசன் கிடைக்கும்?









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீட்டுத் தென்னை



வீட்டின் பின்புறம் நாட்டிய தென்னை
வளைந்து வளர்ந்தது பாராய்
நாட்டிய இடத்திலே சூரிய ஒளியில்லை
நாடி வளர்ந்ததேன் கேளாய்




இலைகளில் பச்சையம் உண்டென நீயும்
ஒருமுறை சொன்னது ஞாபகம்
நிலை நின்றவாறே வேர்களின் உதவியால்
நிலத்தடி நீரினை உறிஞ்சும்




கனியநீர் உட்செல பச்சையம் சேர்ந்துமே
கதிரவன் ஒளிபடு மென்றாய்
இனிய இயற்கையின் உயிர்கள் அனைத்தும்
இன்பமாய் வாழுது என்றாய்



நாம்மட்டும் வாழ்ந்திட சுதந்திரம் இல்லை
நமக்கேனோ கட்டுத் தளைகளாம்
போமெப்போது அடிமைத் தளைகளும்
பொன்னான நாட்களைத் தேடுவோம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றப் பாடு



விரைந்து ஓடிடும் கோச்சியில்ஏறினேன்
விசயத்தைக் கேளென்று சொன்னாய்
இரைந்து கோச்சி ஓடிட மரஞ்செடி
ஏன் பின்னால் போனது? என்றாய்.



இருசில்லுப் பொருத்திய சைக்கிளைநிறுத்த
ஒரு பக்கம் சரிந்ததேன் என்றாய்
இருகாலால் தெத்தி ஏறிமிதிக்கையில்
எப்படி நேராய் ஓடுதே என்றாய்.



நிற்கும் கோச்சியில் இருந்தேன் மற்றொன்று
நேராய்ச் சென்றது என்றாய்
நிற்கும் கோச்சிதான் ஓடுதல் போலொரு
நிகழ்ச்சி வந்ததேன் என்றாய்.



இவ்வகை நிகழ்ச்சிகள் நித்தம் நடக்கும்
இவற்றைப் புரிந்திட வேண்டும்
எவ்வகைக் காட்சியும் இனிதே விளங்கிடும்
இதுதான் வாழ்க்கையின் உண்மை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி நாட்கள்



பாடம் பள்ளியில் படித்த நினைவுகள்
பரந்து மனதை நிரப்பிடும்
சூடும் நினைவுகள் சுகந்தரும் போதிலே
சூழும் காட்சிகள் தோன்றிடும்




கல்வி கரையில கற்பவை நாள்சில
கற்ற றிந்தவர் சொன்னார்
கல்வி என்பது அனுபவப் படிகள்
கல்லறை வரையும் தொடரும்



தேடு கல்வியைப் போலொரு செல்வம்
செகமதில் இல்லை தங்காய்.
தேடிநீ கற்றிடு செல்லுமிட மெலாம்
தேடி வந்தேயுனை வாழ்த்திடும்.

எண்ணம் தூய்மையாய் ஆகிடும் உள்ளமும்
என்றும் இனிமையில் மூழ்கிடும்
திண்ணம் வாழ்வினில் உயர்நிலை வந்திடும்
செகத்தில் புகழுடன் வாழுவாய்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாராய்..நாராய்..



காலை நீட்டிச் சிறகை விரித்துக்
காற்றில் நீந்தும் நாரையைப்பார்
சோலை எங்கும் சுற்றி வருகுதாம்
சேதி தன்னைக் கேள்தங்காய்?




ஏரிகள் நாடி ஊரெலாம் அலைந்து
இரைதனைத் தேடும் நாரைகள்
பாரினில் அகதிகள் படுதுயரதனைப்
பார்த்த சேதியைக் கூறக்கேள்?



முட்கம்பி வேலி முப்புறம் சூழ
முடங்கித் தவிக்கும் உறவுகள்
கட்டி யணைத்து கண்ணீர் சொரிந்து
கதைபல பேசும் நாளதைக் கேள்




கல்வியை இழந்து கற்பதை மறந்து
கலங்கும் சிறார்களைக் கண்டவையா?
தொல்லை தொலைந்து சுகமுடன்வாழும்
சூழ்நிலை வருமா கேள்தங்காய்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூரியன்

காகக் குயில்கள் வரவேற்கும்
களித்து இரைந்து பாட்டிசைக்கும்
மேகம் கிழித்து வெளிக் கிளம்பும்
மெல்லச் சூரியக் குஞ்சுவரும்.




சிவந்த கோளம் சுழற்சிகொள்ளும்
சிறுகச் சிறுக வெண்மைகொள்ளும்
அவனி யெங்கும் இயக்கங் கொள்ளும்
அசையும் காற்று விரைந்துருளும்

நீர்நிலை ஆவி ஆக்கங் கொள்ளும்
நிமிர்ந்து தாவரம் அசைந்தாடும்
பாரினை நிரப்ப ஒக்சிசன் வாயுவை
பரப்பும் தொழிலும் தான் நடத்தும்




சூரியன் இன்றேல் சூனியம் உலகில்
சூழ்ந்துமே மூடிக் கொள்ளும்
காரியம் எதுவுமே பூமியில் இல்லை
காக்கும் பகலவன் வாழ்த்துவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில்




வானவிளிம்பில் வில்லாய் வளைந்த
வண்ணக் கலவையைப் பார்தங்காய்
காணக் கண்கள் ஆயிரம் வேண்டும்
கைகொட்டி ஆடுவோம் வாதங்காய்



பூக்களில் உள்ள நிறங்களை எடுத்து
பூசியதார் வான விளிம்பினிலே?
பாக்களைப் பாடி தாளங்கள் போட்டு
தகதிமி ஆடுவோம் வாதங்காய்




வண்ணக் கலவையை முகமெலாம் பூசி
வானவில் காட்டுவோம் வாதங்காய்
கண்களை மறைத்து வானவில் தேடுவோம்
கண்ணாம் பூச்சி ஆடிட வாதங்காய்




ஏழு நிறங்களில் எழுதிய வில்லை
எங்கள் முகத்தில் வரைந்திடுவோம்
ஏழு சுரங்களில் ச ரி க ம ப த நி
இயற்றியே பாடுவோம் வாதங்காய்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழகுப் பூக்களில் அற்புதம்


பூக்களின் ஆட்டம் கண்பறிக்கும்
பூத்து விரிந்து படபடக்கும்
பாக்கள் வந்து மனம்நிறையும்
பாடும் வாயுள் மணம்நிறையும்



தொட்டுப் பார்க்க மனந்துடிக்கும்
தடவிப் பார்த்தால் உளம்மகிழும்
பட்டு இதழ்கள் பள பளக்கும்
பலநிறக் குவியல் பரந்திருக்கும்




மொட்டு எட்டித் தலைகாட்டும்
மலர்வது நாளை எனச்சொல்லும்
சொட்டுச் சொட்டாய் தேன்வடியும்
சுற்றி வண்டு பாட்டிசைக்கும்



பச்சை இலைகள் பரந்திருக்கும்
பலநிறப் பூக்கள் உள்ளிருக்கும்
மெச்சும் சுவையும் பழமிருக்கும்
மெய்ப்பொருள் தந்த கொடையலவா?










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கதையும் விதையும்




ஆலமரம் அசைந்து நின்றது
அதனருகே அறுகு வளர்ந்தது.
மேலெழுந்து காற்று வந்தது
மெலிந்த அறுகை சாமியாட்டிற்று.




ஆலமரம் சிரித்துக் கொண்டது.
அறுகு தரையில் சாய்ந்தெழுந்தது.
"கோலமென்ன அறுகுப் பிள்ளையே"
கொக்கரித்து நக்கல் அடித்தது.





வேகங்கொண்டு புயல் எழுந்தது
வீசியெங்கும் ஆட்டம் போட்டது.
மேகம் சுழன்று மின்னலடித்தது
மழையும் காற்றும் சுழன்றடித்தது




ஆலமரத்தின் கிளை முறிந்தது
அடிமரமே எஞ்சி நின்றது
மேலெழும்பி அறுகும் பார்த்தது
வெந்து மனம் துயரும்கொண்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புரிந்து கொள்

இந்த உலகம் இனிமையானது
எங்கும் இயற்கை கூத்துமாடுது
சொந்தம் நம்மைச் சூழ்ந்து நின்றிடும்
துன்பம் வந்தால் துடைத்துவிட்டிடும்





இன்ப துன்பம் எம்மைநாடிடும்
இதற்கும் நமது மனமே காரணம்
நன்மை செய்து நாளும் வாழ்ந்திடு
நமதிறையும் உன்னைக் காத்திடும்




பெரியோரை மதித்து நடந்திடு
பெற்றோரை என்றும் போற்றிடு
அரிய செயல் அனைத்தும் செய்திடு
அன்பு என்றும் அகத்தில் கொண்டிடு



உன்னால் உலகம் உயரவேண்டுமே
உழைப்பால் உயர்ந்து வாழவேண்டுமே
இன்பம் அதுதான் உணர்ந்து கொள்ளடி
என்றும் புகழும் உன்னைச் சேர்ந்திடும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயங்கள்





எறும்பு ஊரக் கற்குழி யுமாம்
இரும்பும் வளியில் தேய்ந்த ழியுமாம்
எறும்பு ஒன்று செல்லுந் திசையிலே
எல்லாஞ் சேர்ந்து ஒழுங்கிலசையுமாம்



கிணறு இறைக்கத் தண்ணீர் ஊறுமாம்
கிண்டக் கிண்டத் தண்ணீர் பெருகுமாம்
உணவைப் பகிர்ந்துஉண்ணவேண்டுமாம்
உடுக்கும் உடையைக் கழுவவேண்டுமாம்




தண்ணீர் மெல்லப் பாய்ந்து செல்லுமாம்
தகர்ந்து கல்லும் தேய்ந்து குழியுமாம்
உண்மை தனைச்சொல்லி வைத்தார்கள்
உணர்ந்து தங்காய் வாழப்பழகணும்



உலகம் நம்மை வாழவைக்குமாம்
உள்ளவரை நன்மை செய்யுமாம்
பலதைப் புரிந்து வாழப்பழகினால்
பயனைப் பெற்று பெரிது வாழலாம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவர வகை




புளியம் விதையை நிலத்தில் - நீ
போய்ப் பதியம் போடு
முளையும் நிமிர்ந்து கொள்ளும் - தலை
முகிழ்த்து இரண்டாய் தெரியும்



கிளைகள் உள்ள மரமாய் - வளர்ந்து
கிளர்ந்து வேரை நீட்டும்.
பிளந்து நிலத்தில் வேரை - ஊன்றி
பெரிய மரமாய் காட்டும்



தென்னை பனையின் விதையை - நீ
தெரிந்து நாட்டிப் பாரு
முன்னம் முளையும் தெரியும் - விதை
மண்ணின் உள்ளே இருக்கும்.




கிளைகள் இன்றி உயரும் - நேராய்
கிளர்ந்து உயர்ந்து வளரும்
தலையில் வட்டும் கொள்ளும் - இலையும்
தனி வடிவம் காட்டும்

இருவித் திலைத் தாவரம் - கிளை
இலைகள் கொண்டு வளரும்
ஒருவித் திலைத் தாவரம் - கிளை
அற்று நீண்டு வளரும்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்கள்



மண்ணின் மேலே தெரியும் - பகுதி
மரத்தின் தண்டுத் தொகுதி
மண்ணின் கீழே மறைந்து - இருக்கும்
மரத்தின் வேரின் தொகுதி



தென்னை வேரைப் பாரு - அதில்
தெரியும் நாருரு வேர்கள்
புன்னை மரத்தைப் பாரு - ஆணிவேர்
புதைந்து மண்ணுள் ஓடும்



இருவித் திலைத் தாவரம் - அதற்கு
இருக்கும் ஆணி வேர்தான்
ஒருவித் திலைத் தாவரம் - எதற்கும்
இல்லை ஆணி வேர்தான்.





ஆல மரத்தின் விழுது - கிளையில்
ஆடி நிலத்தில் ஊன்றும்
கீழே ஊன்றி உரமாய் - அதன்
கிளையைத் தாங்கி நிற்கும்.



சதுப்பு நிலத்தைப் பாரு - கண்டல்
தாவ ரங்கள் வளரும்
கொதித்து வரளும் நிலத்தில் - தடித்த
கள்ளிச் செடிகள் வளரும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் சிறுவர் நூல்கள்

| இல. | நூலின் பெயர் | நூலின் வகை | |
|---|---|---|---|
| 01. | இன்பக் கனிகள் | சிறுவர் பாடல் | |
| 02. | பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல் | |
| 03. | காகமும் தம்பியும் | சிறுவர் பாடல் | * |
| 04. | பாடி ஆடுவோம் | சிறுவர் பாடல் | |
| 05. | கடலும் காவிரியும் | சிறுவர் பாடல் | |
| 06. | சின்னச் சின்னப் பாட்டு | சிறுவர் பாடல் | |
| 07. | மனதுக்கினிய பாட்டு | சிறுவர் பாடல் | * |
| 08. | ஆனந்தமான பாட்டு | சிறுவர் பாடல் | |
| 09. | சகோதரராய் வாழ்வோம் | சிறுவர் பாடல் | |
| 10. | இசையோடு அசைவோம் | சிறுவர் பாடல் | * |
| 11. | தம்பிக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் | |
| 12. | அறிவைத் தரும் பாடல்கள் | சிறுவர் பாடல் | * |
| 13. | இனிக்கும் பாடல்கள் | சிறுவர் பாடல் | |
| 14. | அறிவொளிப் பாடல்கள் | சிறுவர் பாடல் | |
| 15. | தங்கைக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் | |
| 16. | ஆடிப்பாடும் பாடல் | சிறுவர் பாடல் | |
| 17. | ஆடி மகிழ்வோம் | சிறுவர் ஆடலும் பாடலும் | |

**சிறுவர் கதைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | பூஞ்சிட்டுக்கள் | சிறுவர் கதைகள் | |
| 02. | சின்னத் தேவதைகள் | சிறுவர் கதைகள் | * |
| 03. | கண்ணனும் இராமனும் | சிறுவர் கதைகள் | |
| 04. | தங்க மாம்பழம் | சிறுவர் கதைகள் | |
| 05. | சிறகு வைத்த கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 06. | சாதனையாளர் | சிறுவர் கதைகள் | |
| 07. | அற்புதமான வானம் | சிறுவர் அறிவியல் கதைகள் | * |
| 08. | பார்த்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 09. | மலைத்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 10. | சுவையான கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 11. | சின்னச் சின்ன சிறுவர் கதைகள் | சிறுவர் கதைகள் | * |
| 12. | சந்திரன் கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 13. | வித்தகன் விபுலானந்தன் | சிறுவர் இலக்கியம் | |

**English Stories**

| | | |
|---|---|---|
| 01. | The Little Spider | for Children |
| 02. | The Butterflies and Children | for Children |
| 03. | The Crow and the Cuckoo | for Children |
| 04. | The tree and the Parrot | for Children |
| 05. | The Elephants and Ants | for Children |
| 06. | The Man and the Fish | for Children |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN : 978-955-52535-7-4
Price : Rs. 150/-

9789555253574

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org